கூட்டுறவே நாட்டுயர்வு

# சங்கம் செய்தி

கட்டைவேலி நெல்லியடி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

ஜனநாயக ஆளுமையும்
சமூக மேம்பாடும்

பதிவு இல: J/ 1553 | *Each for All; All for Each* | பதிவுத் திகதி : 16.02.1971

தொலைபேசி : 021 226 3263, 4474, 4725, 060 221 2540 தொலைநகல்: 021 226 3263

பெட்டகம் : 1 | நவம்பர் – 2008 | செய்தி : 18

## ஊழியர் சேமலாப நிதியத்துக்கு வயது 50

1956ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்த காலஞ் சென்ற பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதன் மிகக் குறுகிய பதவிக் காலத்தில் அறிமுகப்படுத்திய மக்கள் நலன்புரித் திட்டங்களில் மிகவும் போற்றத் தக்க ஒன்று தனியார்துறை ஊழியர்களுக்கான சேமலாப நிதியமாகும். சுதந்திர இலங்கையில் இதுவரை பதவிக்கு வந்த எந்தவொரு அரசாங்கமுமே இதையொத்த மகத்தான சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றைத் தொழிலாளர் வர்க்கத்தினருக்காக நடைமுறைப்படுத்தியதாகக் கூறுவதற்கில்லை. புருச இலட்சணமாக ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்துக்கு நிகரான தாக நாளடைவில் தனியார்துறை உத்தியோகத்தையும் மேம்பட வைத்ததில் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்கு அளப்பரியது. அரசாங்க உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் தங்கள் மிகுதிக்காலத்தில் வாழ்க்கையை நடத்துவதற்கு ஓய்வூதியத்தை நம்பிக் கொண்டிருந்தபோது தனியார்துறை ஊழியர்கள் ஓய்வுக்குப் பின்னரான காலத்தை ஏக்கத்துடன் நோக்கிய காலகட்டமொன்று இருந்தது. அந்த ஏக்கத்தை இல்லாமல் செய்து தனியார்துறை ஊழியர்களும் ஓய்வுக்குப் பின்னரான வாழ்வை நம்பிக்கையுடன் நோக்க வைத்தது ஊழியர் சேமலாப நிதியமேயாகும்.

ஊழியர் சேமலாப நிதியத்துக்கு நாளைய தினத்துடன் சரியாக 50 வயதாகிறது. 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின்கீழ் 1958 நம்பர் 28ஆம் திகதி ஊழியர் சேமலாப நிதியம் ஏற்படுத்தப்பட்டது. பண்டாரநாயக்க அரசாங்கத்தில் தொழில் அமைச்சராக இருந்த காலஞ் சென்ற ரி.பி இலங்கரத்னவின் சிந்தனையில் உதித்ததே இந்த நிதியமாகும். இன்று இலங்கையில் மிகப்பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டமாக விளங்கும் ஊழியர் சேமலாப நிதியம் (2007 டிசம்பர் வரையான மதிப்பீட்டின்படி) 56000 கோடி சொத்துத் தளத்தைக் கொண்டிருக்கிறது. இந்த நிதியத்தின் நிர்வாக ரீதியான அம்சங்கள் தொழில் திணைக்களத்தினால் கையாளப்படுகின்ற அதேவேளை, அதன் நிதி முகாமைத்துவத்தை இலங்கை மத்திய வங்கி கையாளுகிறது. இந்த நோக்கத்துக்காக மத்திய வங்கியில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமொன்று நிறுவப்பட்டிருக்கிறது. சட்டத்தின் பிரகாரம் ஊழியர்கள் தங்கள் மொத்தச்சம்பளத்தின் 8 சதவீதத்தையும் தொழில் கொள்வோர் 12 சதவீதத்தையும் நிதியத்துக்கு மாதாந்தம் பங்களிப்பைச் செய்யவேண்டும். தனியார்துறை ஊழியர்கள் மாத்திரமல்ல தற்போது அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளின் ஊழியர்களும் சேமலாப நிதியத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். தொழிலின் தன்மைக்கு அப்பால் சகல ஊழியர்களும் அவர்கள் நிரந்தரமானவர்களாகவோ, தற்காலிகமானவர்களாகவோ இருந்தாலும் சரி சமயாசமய அடிப்படையிலோ தகுதிகாண் கால அடிப்படையிலோ பணிபுரிந்தாலும் சரி ஊழியர் சேமலாப நிதியத்தில் சேர்க்கப்பட

(அ் பக்கம் பார்க்க...

## கூட்டுறவுத்துறையின் தனித்துவத்தை சாதகமாக்கி சாதித்துக் காட்டிய பெரியார்



கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின் 43ஆவது சிரார்த்த தினத்தை கொண்டாடும் இவ வேளையில் அன்னாரின் கூட்டுறவுப் பணிகளை நன்றியுடன் நினைவுகூருதல் பொருத்தமானதே. அவரது பணிகளை மனம்கொள்ளும் சமநேரத்தில் பெரியார் எமக்கு போதித்த பாடங்கள், காட்டிய வழிகள், ஆற்றிய பணிகள், சாதித்த செயல்திறன்கள், ஈட்டிய வெற்றிகள் என பல விடயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்வதும், அவற்றில் இருந்து நாம் கற்கவேண்டிய விடயங்களைக் கருத்தில் கொள்வதும் மிக முக்கியமானதே. ஏனெனில் வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமே.

இலங்கை கூட்டுறவு இயக்க வரலாறு பல தலைவர்கள் யும், கூட்டுறவாளர்களையும் கண்டு வந்துள்ளது. எனினும் தேசிய மட்டத்திலும் சரி குறிப்பாக எமது மாவட்டத்திலும் சரி முன்னுதாரணமாக அல்லது சிறப்பாக பேசக்கூடியவராக தனக்கு நிகரில்லா கூட்டுறவுத் தலைவராக நிலைத்திருப்பவர் பெரியார் வீரசிங்கம் அவர்களே. அவர் ஒரு தமிழனாக இருந்தபோதும் தேசிய மட்டத்தில் இலங்கை கூட்டுறவாளர்கள் அனைவரதும் தலைவராக உயர்ந்திருந்தார் என்றால் அதற்குக் காரணம் அவரிடம் இருந்த அற்புதமான தலைமைத்துவ ஆற்றல்களே. நவீன தலைமைத்துவ கோட்பாட்டாளர்களால் இனம்கண்டு பட்டியல் இடப்பட்டுள்ள தலைமைத்துவப் பண்புகள் அனைத்தும் ஒருங்கமைந்த ஒரு தோற்றமே பெரியார் வீரசிங்கம் எனலாம். பெரியார் வீரசிங்கம் அவர்களிடம் இருந்த சிறந்த ஆற்றல்களை தற்காலத்தில் பேசப்படும் தலைமைத்துவப் பண்புகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதோடு தற்போதைய கூட்டுறவு செயல்பாடுகளுக்கு தலைமைத்துவத்தின் தேவைப்பாடு பற்றி சிந்திப்பதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒருவருடைய நடத்தை என்பது அவரது உயிரியல் காரணிகள், குடும்பமும் சமூகமும், கலாசார காரணிகள், மற்றும் சூழல் காரணிகள் போன்றவை தீர்மானிக்கின்றன. இந்த வகையில் பெரியாரது வாழ்வில் இவை யாவும் சாதகமாகவே அமைந்தமையைக் காணலாம். சிறந்த கல்லூரிகளும், உயர்ந்த அறிவுசார் பெரியோர்களும், செறிவாக உள்ள மானிப்பாய் கிராமத்தில் திரு.திருமதி விஸ்வலிங்கம் அன்னம்மா தம்பதியருக்கு புதல்வராக 1892ம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய இவர் அக்காலத்தில் உயர்ந்த ஒரு கல்வித்தரமாக இருந்த லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சையில் சித்தியடைந்தார். தனது பத்தொன்பதாவது வயதிலே தான் கல்விகற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியராக இணைந்து, அதிபராகப் பதவி

(2ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டுறவுத்துறையின்.....**

உயர்ந்து சுமார் முப்பது வருடங்கள் கல்வி உலகிற்கு உன்னதமான பணியை வழங்கினார்.

தனது கல்விப்பணியோடு சமய, சமூக, அரசியல் பணிகள் பலவற்றை அணி செய்த பெரியார் புனித இயக்கமான கூட்டுறவு இயக்கத்திலும் தன்னை இணைத்து புனிதமான கூட்டுறவுப் பணியை பிராந்திய, மாவட்ட, தேசிய மட்டங்களிற்கு விரிபுபடுத்தினார்.

கூட்டுறவு இயக்கம் சிறந்த மனித விழுமியங்களையும், பொருளாதார வளர்ச்சிக்கான சிந்தனைகளையும் உள்ளடக்கிய பாரிய விருட்சமாகும். கூட்டுறவின் பெறுமதிகளை நன்கு புரிந்துகொண்ட பெரியார் தனது தன்னலமற்ற சேவையை நல்கியதன் மூலம் பாரிய பலாபலன்களை பெற்றுக் கொடுத்தார். ஒரு நல்ல தலைவனுக்கு இருக்க வேண்டுமென எதிர்பார்க்கும் பண்புகளான தூரநோக்கு, உருவாக்கும் இயல்பு (Innovator) என்பன அவரிடம் இயல்பாகவே இருந்தமையால், பிரதேச சமூக பொருளாதார கலாசார மேம்பாடு கருதி பல்வேறு கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கி வெற்றிகரமாக செயல்படுத்தினார். குறிப்பாக மலையாளம் புகையிலை கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட கூட்டுறவு வங்கி, வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை, யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, இலங்கை கூட்டுறவுச் சம்மேளனம் என்பவை மிக முக்கியமான அமைப்புக்களாகும்.

சாதாரண ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து அதிபராக உயர்ந்து சமூக பணிகள் பலவற்றின் தலைவராகி, பட்டங்கள் பல பெற்று பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவிவரை உயர்ந்த பெரியாரிடம் பல்வேறு சிறந்த தலைமைத்துவ பண்புகள் இருந்தமையை அவர் பற்றிய நூல்களிலும், வரலாறுகளிலும் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

தலைமைத்துவம் என்றால் என்ன என்பதையும், தலைவருக்கு இருக்கவேண்டிய பண்புகள் எவை என்பதையும் நாம் நோக்கும்போது பெரியாருக்கு இருந்த தலைமைத்துவ ஆற்றல்களை கணிப்பிட முடியும்.

தலைமைத்துவம் என்பது ஒரு கடமையைச் செய்யும் பொருட்டு நியமிக்கப்படும் அல்லது உருவாக்கப்படும் குழுக்களின் உறுப்பினரை வழிகாட்டுவதாகும். அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி அக்குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் ஓர் செய்முறையே தலைமைத்துதவமாகும்.

இச்செய்முறையை மேற்கொள்வதற்கு ஒரு தலைவருக்கு இருக்கவேண்டிய பண்புகளையே தலைமைத்துவ பண்புகள் என்கின்றோம். இவை உடலியற்பண்புகள் (Physical Traits) சமூகப்பண்புகள் (Social Traits), ஆளுமைப்பண்புகள் (Personality Traits) தனிப்பட்ட பண்புகள் (Personal Traits) என்ற நான்கு வகையான அம்சங்களையும் சார்ந்தவையாகும்.

பெரியார் வீரசிங்கம் அவர்களைப் பொறுத்தவரையில் இந்த நான்கு வகையான அம்சங்களிலும் ஒன்றை ஒன்று விஞ்சுவதாகவே இருந்துள்ளமையை நாம் அறிகின்றோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக இன்று பெரிதும் பேசப்படும் Win-win என்ற நவீன கோட்பாட்டிற்கு மிகவும் பொருத்தமானவராக திகழ்ந்துள்ளார். இதனை பெரியார் பற்றிய பேராசிரியர் கைலாசபதி அவர்களது கூற்றில் இருந்து நாம் அறிய முடியும். அதாவது பெரியார் வீரசிங்கம் அவர்களது சேவையால் கூட்டுறவு பெருமைபெற்றது. கூட்டுறவால் பெரியார் வீரசிங்கம் பெருமை பெற்றார்.

இன்றைய நிலையில் கூட்டுறவு இயக்கம் தன் முன்னுள்ள பல்வேறு சவால்களை வெற்றிகொள்வதற்கு அர்ப்பணிப்பும் ஆற்றலுமுள்ள தலைமைத்துவத்தின் தேவையை பெரிதும் வேண்டி நிற்கின்றது.

குறிப்பாக கூட்டுறவு தனக்கென தனியான விழுமியங்களை முதலில் செயல் மூலம் நிறுவுதல், மனிதர்களை ஒன்றிணைத்தல்மூலம் பெறும் ஆக்கசக்தியை ஏற்படுத்தல், நம்புதல், தனிமனிதனுக்கு முக்கியத்துவம் அளிக்காது சமூகநலனுக்கு முக்கியத்துவம் அளித்தல் போன்ற உபாயங்களைக் கையாளவும், சுயமான நிதி வளங்களை உரிய வகையில் ஒன்று திரட்டி நல்வாழ்வுக்கான வசதிகளை ஏற்படுத்தக்கூடிய செயல்திட்டங்களை நடத்தல், மனநிறைவு மிகுந்த வேலைப்படையை உருவாக்குதல், மாதர், இளைஞர்களுக்கு கூட்டுறவில் அதிகரித்த பங்கினை வழங்கல் மொத்தத்தில் நிலைத்து நிற்கும் சமூகவிருத்திக்கு உழைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளவும் கூட்டுறவுத் தலைமைத்துவம் தன்னை மேலும் தயார்ப்படுத்த வேண்டி உள்ளது.

மேலும் மக்களது நம்பிக்கையை கட்டியெழுப்புதல் தொடர்பிலும், கூட்டுறவுத்துறைக்கான சிறப்புக்களை சாதகமாகப் பயன்படுத்தும் வல்லமையை தனதாக்குவதற்கு ஏற்கத்தக்க அளவில் தயாராக இருக்காமை போன்ற சாவல்களை வெல்வதற்கும் செயல்திறன்மிகு தலைமைத்துவம் வேண்டப்படுகிறது.

இங்கு குறிப்பிட்ட உபாயங்கள், எதிர்பார்க்கும் செயல்பாடுகள் போன்றவைகளில் அன்றே பெரியார் வீரசிங்கம் அவர்கள் பலவற்றை நடைமுறைச் சாத்தியமாக்கியுள்ளார். கூட்டுறவின் தனித்துவம் அவரது காலத்தில் மிளிர்ந்தது. மனிதர்களை ஒன்றிணைப்பதில் வெற்றிகண்டவர். நிதிதிரட்சிகளை இலகுவான முறையில் ஏற்படுத்த அவர் அமைத்த கூட்டுறவு வங்கி நல்ல உதாரணமாகும்.

மேலும் அவரது காலத்தில் தனது தலைமைத்துவ ஆற்றலால் மக்களது நம்பிக்கையை கட்டியெழுப்பினார். கூட்டுறவுத்துறையின் தனித்துவத்தை சாதகமாக்கி சாதித்துக் காட்டினார். எனவே இன்று எம்முன் உள்ள சவால்களை எதிர்கொள்ளவும், உபாயங்களை வகுக்கவும் செயல்பாடுகளை சாதிக்கவும் பெரியாரின் தலைமைத்துவ அணுகு முறைகளை பற்றிக் கொள்வோமாக.

**திருமதி வேதவல்லி செல்வரத்தினம்**
*மகளிர் விவகார உத்தியோகத்தர்*
*யா/மா/கூ/சபை*
*நன்றி: ஐக்கியதீபம் - நவம்பர் 2007*

---

**ஊழியர் சேமலாப.......**

வேண்டும். எந்தத் தொழில்துறையாக இருந்தாலும் ஒரு தொழிலாளியை மாத்திரம் வேலைக்கு அமர்த்தும் தொழில்கொள்வோர்கூட சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்வதற்கு சட்டரீதியாகக் கடமைப்பட்டவராவர்.

ஒவ்வொரு ஊழியரினதும் சேமலாப நிதியக் கையிருப்பு வருடாந்தம் வளர்ந்து கொண்டே போகிறது. சேமலாப நிதியத்தை மத்திய வங்கி அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் முதலீடு செய்திருக்கிறது. இந்த முதலீடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற பங்கு இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு வட்டி வீதம் கணக்கிடப்பட்டு வருடாந்தம் ஒவ்வொரு ஊழியரினதும் சேமலாப நிதிய கையிருப்புடன் சேர்க்கப்படுகிறது. இத்தகைய செயற்பாட்டின் மூலமாக ஊழியரினதும் அவரது குடும்பத்தினரினதும் சுமுகமாக வாழ்க்கை அவரது ஓய்வுக்குப் பிறகு உறுதி செய்யப்படுகிறது. ஊழியர் ஓய்வுபெறும்வரை அதாவது 55 வயது வரை சேமலாப நிதியத்தை மீளப் பெறமுடியாது. ஆனால் அவரது சேவைக்காலத்தில் சேமலாப நிதியத்தின் மூலமாக பல்வேறு வசதிகளையும் சலுகைககளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக நிதியத்தில் கணக்கு இருக்கும் கையிருப்பின் 75 சத வீதத்தை பிணையாக வைத்து ஊழியர் ஒருவர் வீட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஆனால் கணிசமான எண்ணிக்கையான தொழில்கொள்வோரின் நடவடிக்கைகளினால் ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நன்மைகளை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

**ஆசிரியர் தலையங்கம்**
**தினக்குரல்**
*27.11.2008*
*நன்றி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்க தொழிற்பரப்பிலுள்ள பாடசாலைகளில் 2008ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

### 01. யா/விக்கினேஸ்வராக் கல்லூரி

| | புள்ளி |
|---|---|
| 01) செல்வி கதிரவேலு தயானி | 137 |
| 02) செல்வன் அழகேஸ்வரன் ராஜ்மேனன் | 123 |
| 03) செல்வி செந்தூர்ச்செல்வன் துஷிதா | 122 |
| 04) செல்வன் இரத்தினகுமார் கபில்ராஜ் | 115 |

### 02. யா/வதிரி திரு இருதயக்கல்லூரி

| | |
|---|---|
| 05) செல்வன் நா. டிலக்ஸ் | 146 |
| 06) செல்வி தே. சங்கவி | 145 |
| 07) செல்வி ச. டிலக்ஷனா | 139 |
| 08) செல்வி பா. சௌமியா | 131 |
| 09) செல்வி சு. சிவப்பிரியா | 127 |
| 10) செல்வி ரு. திவிஜா | 118 |

### 03. யா/ஞானசாரியார் கல்லூரி

| | |
|---|---|
| 11) செல்வன் கருணாநிதி ராகுலன் | 152 |
| 12) செல்வன் மகேந்திரா ராகுலன் | 138 |
| 13) செல்வன் ராசேந்திரம் றஜிகரன் | 134 |
| 14) செல்வன் விமலநாதன் தனுசன் | 134 |
| 15) செல்வன் நாகேந்திரம் அஜந்தன் | 130 |
| 16) செல்வி முருகானந்தன் பிரசாந்தினி | 114 |

### 04. யா/தேவரையாளி இந்துக்கல்லூரி

| | |
|---|---|
| 17) செல்வன் மகேஸ்வரன் மதுமிதன் | 136 |
| 18) செல்வி சர்மிளா திரவியம் | 127 |
| 19) செல்வன் இராஜரஞ்சன் ஜானுஷன் | 121 |

### 05. யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்

| | |
|---|---|
| 20) செல்வி நிரோசா சாந்தகுமார் | 125 |

### 06. யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்

| | |
|---|---|
| 21) செல்வன் செல்வராசா கோகுலன் | 131 |
| 22) செல்வி அருளானந்தம் துளசி | 124 |
| 23) செல்வன் குணரட்ணம் ஜனார்த்தனன் | 113 |

### 07. யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

| | |
|---|---|
| 24) செல்வி சங்கீர்த்தனா மோகன் | 174 |
| 25) செல்வன் நீரஜன் சிவசங்கர் | 156 |
| 26) செல்வி அபிஷேகா தபேந்திரன் | 152 |
| 27) செல்வன் லலிதாகாந்தன் கிறிகாந்நன் | 146 |
| 28) செல்வி யுவேகா கிருஷ்ணகுமார் | 145 |
| 29) செல்வன் தணீஷன் இராசேஸ்வரன் | 144 |
| 30) செல்வி லக்ஷலா சிவராசா | 140 |
| 31) செல்வி பவித்ரா பாலேஸ்வரன் | 139 |
| 32) செல்வன் சிந்துஷன் இரவீந்திரன் | 138 |
| 33) செல்வி இங்கிதை மெய்யழகன் | 137 |
| 34) செல்வி டர்சிகா கிருபேந்திரமூர்த்தி | 136 |
| 35) செல்வன் கோகுலன் சிவானந்தமூர்த்தி | 131 |
| 36) செல்வன் கிருஷாந் சிவயோகநாதன் | 130 |
| 37) செல்வி கீர்த்தனா முத்துக்குமார் | 129 |
| 38) செல்வி தேவபிரியா பாலச்சந்திரன் | 124 |
| 39) செல்வன் ராகுல் இராஜலிங்கம் | 122 |
| 40) செல்வி சங்கீர்த்தனா வல்லிபுரநாதன் | 121 |
| 41) செல்வி கோமிளா கிருஷ்ணகோபால் | 120 |
| 42) செல்வன் சிவானுஷன் சச்சிதானந்தம் | 119 |
| 43) செல்வன் சிந்துஷன் சச்சிதானந்தம் | 118 |
| 44) செல்வன் சிந்துஷன் ஜெயறூபன் | 118 |
| 45) செல்வன் விதுஷன் கஜேந்திரன் | 117 |
| 46) செல்வி விர்ஷிகா இராசரத்தினம் | 116 |

### 08. யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்

| | |
|---|---|
| 47) செல்வன் சு. திலக்ஷன் | 154 |
| 48) செல்வன் சு. சஞ்சீவன் | 151 |
| 49) செல்வன் ம. கவியரசன் | 147 |
| 50) செல்வி ஜெ. நிசோபா | 146 |
| 51) செல்வன் சு. அச்சுதன் | 134 |
| 52) செல்வன் சி. சுமணன் | 131 |
| 53) செல்வி த. கஜிதா | 123 |
| 54) செல்ன் க. கோகிலன் | 118 |
| 55) செல்வி சி. தேவகி | 117 |
| 56) செல்வன் கோ. கவிதாஞ்சன் | 116 |

### 09. யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்

| | |
|---|---|
| 57) செல்வன் ரவிச்சந்திரன் ராகவன் | 146 |
| 58) செல்வி ஆனந்தமூர்த்தி சங்கீதா | 140 |
| 59) செல்வன் திலகேஸ்வரன் மதுமிதன் | 140 |
| 60) செல்வி புவனேந்திரன் துளசிகா | 135 |
| 61) செல்வன் பவநீஸ்வரன் சிவாகரன் | 135 |
| 62) செல்வி ஜெயச்சந்திரன் அபிதாரணி | 134 |
| 63) செல்வன் நக்கீரன் கௌதமன் | 130 |
| 64) செல்வன் நந்தகுமார் தர்மிதன் | 116 |

### 10. யா/வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை

| | |
|---|---|
| 65) செல்வன் ஸ்ரீதரன் ராம்சந்தர் | 126 |
| 66) செல்வி கௌதமன் சினேகா | 114 |

### 11. யா/கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை

| | |
|---|---|
| 67) செல்வன் சண்முகராசா தனுராஜ் | 113 |
| 68) செல்வன் குகஞானம் நேசரூபன் | 101 |

### 12. யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை

| | |
|---|---|
| 69) செல்வி சிவகுமார் சிவானி | 141 |
| 70) செல்வன் செல்வகுமார் சயந்தன் | 13 |
| 71) செல்வி சபாநாதக்குருக்கள் சாருனிதா | 12 |
| 72) செல்வன் கமலநாதன் பிரதீஸ் | 12 |
| 73) செல்வி பரமேஸ்வரன் பவித்ரா | 1 |
| 74) செல்வி தெய்வேந்திரம் சோபியா | 1 |

### 13. யா/துன்னாலை தெற்கு ஜீ.ரி.எம். பாடசாலை

75) செல்வன் சி. சிந்துஜன்

### 14. யா/கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை

76) செல்வி ரசீந்திரராசா சதூஷா
77) செல்வி கருணானந்தன் நிந்துஷா

## நாட்டார் கலை......

மேலைத்தேய கலாசாரங்களுக்கு அடிமையாகிவிட்டதன் காரணமாக மேனாட்டு இசை, நடனம், அரங்க அமைப்பு முறை, இசைக்கருவிகள் என்பன செல்வாக்குச் செலுத்துவதால் இக் கலைகள் தமது உயிர்த்துடிப்பை, தனித்துவத்தை இழந்து விடுகின்றன. இதனால் எமது இனத்தின் பண்பாட்டு அடையாளம் சிதைக்கப்படுகின்றது. உழைக்கும் மக்களின் பிரச்சினைகள் கொண்ட இக்கலைகள் வெகுசன ஊடகங்களில் இடம்பெற வாய்ப்பு மறுக்கப்படுகின்றனவே தவிர திரைப்படங்களிலும், நவீன நாடகங்களிலும் இயக்குநர்களின் உத்தியால் பயன்படுத்தப்பட்டு கோடிக்கணக்காக சம்பாதிக்கின்றனர். இன்றைய, மாறிவரும் நவீன யுகத்திலே தமிழர் பாரம்பரியத்தின் இசைக்கருவியான "பறையை" மரண வீடுகளில் பயன்படுத்தாது அணிவகுப்பு வாத்தியம் (பான்ட் வாத்தியம்) பயன்படுத்துவதை தமிழர்கள் நாகரிகமாகக் கொண்டுள்ளனர்.

எமது பாரம்பரிய கலாசாரங்களை அடுத்த தலைமுறை கையளிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்து. கலை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ் வருக்கும் உண்டு. தமிழினத்தின் அடையாளமாக வி இக்கலைகளின் மூலமே எமது இனப்பண்பாட்டை தக் முடியும் என்பதால் சங்கங்கள் அமைத்து இக்கலை பொறுப்பான அண்ணாவிமாரை வருடந்தோறும் செ பரிசில்களும் பட்டங்களும் வழங்க ஆவன செய்தல் ே இதற்கு அரசாங்கமும் இலக்கிய ஆர்வலர்களும், ட முன்வர வேண்டும்.

செல்வி சுபாஷனி சிவ
தமிழ் சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. த. ஆனந்தமயில் அவர்களின் "ஓர் எழுதுவினைஞனின் டயறி" சிறுகதை தொகுப்பு அறிமுகம்

## நிகழ்வின் சில பதிவுகள்




திரு. M. சிறீபதி யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் அறிமுகவுரை நிகழ்த்துகிறார்.



திரு. பா. இரகுவரன் ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி ஆய்வுரை நிகழ்த்துகிறார்.




குப்பிளான் ஐ. சண்முகன் பிரபல விமர்சகர் ஆய்வுரை செய்கிறார்.



திரு. அ. குணேஸ்வரன் பட்டதாரி, கவிஞர் ஆய்வுரை செய்கிறார்.



திரு. ச. இராகவன் படைப்பாளி கூட்டுறவு பெருமன்ற இணைச்செயலாளர் ஆய்வுரை நிகழ்த்துகிறார்.



ஆ. நித்திலவர்மன் ...விரிவுரையாளர் ... ...ார்.

## நிகழ்வின் தொகுப்பு

மேற்படி நிகழ்வு 26.10.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கலாசார பெருமன்ற அனுசரணையில் சங்க மண்ட பத்தில் சங்கத் தலைவர் திரு.த.சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வ. செல்வராசா அவர்களும் சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி திரு.க. அம்பலவாணர் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

தலைமை உரையைத் தொடர்ந்து கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றச் செயலாளர் திரு.இ. இராகவன் அவர்களின் அறிமுகவுரை நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை சிறப்பு விருந்தினர் திரு.க. அம்பலவாணர் கோட்டக் கல்வி அதிகாரி அவர்கள், யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் திரு. ந. சிறிபதியிடம் பெற்றுக் கொண்டார். நூலினை யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் திரு. M. சிறிபதி, எழுத்தாளர், திரு. குப்பிளான் ஐ. சண்முகன், படைப்பாளி ச. இராகவன், ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு.பா. இரகுவரன், கவிஞர் திரு. அ. குணேஸ்வரன் ஆகியோர் திறனாய்வு செய்தனர்.

ஏற்புரையை நூலாசிரியரின் மகன் திரு.ஆ. நித்திலவர்மன் (உதவி விரிவுரையாளர்) கல்வியியற் துறை, யாழ். பல்கலைக்கழகம் அவர்கள் நிகழ்த்தினார்.

சங்க உபதலைவர் திரு. சி. வீரசிங்கம் ஜே.பி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவெய்தியது.



மேற்படி நிகழ்வில் கலந்துகொண்ட பெண்களின் ஒருபகுதி.

**கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி**

**நவம்பர் மாதம் பணியாளர்களுக்கு**

**வழங்கிய ஊக்குவிப்புக்கள்**

01. கூடிய காசு விற்பனை - **14 பணியாளர்கள்**
02. துவிச்சக்கரவண்டி பொருட்கள் கொண்டு சென்றமை - **34 பணியாளர்கள்**
03. நிஷா சூறாவளிக் காலத்தில் 3 நாட்கள் செய்த விற்பனைக்கு - **15 பணியாளர்கள்**
04. 26.11.2008இல் விடாமழை நாள் காசு ஒப்படைத்தமைக்காக - **7 பணியாளர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளைகளின் விற்பனைத் தொகுப்பு நவம்பர் - 2008

| கிளைகளின் பெயர் | மொத்தம் |
|---|---|
| 1. மாலுசந்தி பிள்ளையார் | 530412.00 |
| 2. முத்துமாரி அம்மன் | 560552.50 |
| 3. கட்டைவேலி 1 | 536040.00 |
| 4. கட்டைவேலி 2 | 595898.55 |
| 5. கல்வத்தை | 370339.30 |
| 6. கனுவில் | 783816.00 |
| 7. அந்திரான் | 408586.00 |
| 8. தச்சை ஐங்கரன் | 441736.50 |
| 9. கோயிற்கடவை | 279406.55 |
| 10. நெல்லியடி | 517975.25 |
| 11. நுகவில் | 518713.80 |
| 12. சந்திரா | 280272.70 |
| 13. சண்டில் | 519478.90 |
| 14. குடவத்தை | 801363.00 |
| 15. கிளான் | 421454.50 |
| 16. வதிரி | 743254.65 |
| 17. யார்க்கரு | 480159.50 |
| 18. வல்லியானந்தம் | 287012.50 |
| 19. துன்னாலை மத்தி | 458111.00 |
| 20. மனோகரா | 526697.75 |
| 21. கிழவி தோட்டம் | 536175.54 |
| 22. இராச கிராமம் | 649199.00 |
| 23. டைமன் | 386445.00 |
| 24. சம்பந்தர் கடை | 399447.70 |
| 25. அல்லையம்பதி | 253685.00 |
| 26. கொடிக்காடு | 300103.00 |
| 27. புதுத்தோட்டம் | 211331.05 |
| 28. வட்டுவத்தை | 516940.20 |
| 29. ஓடை | 387050.85 |
| 30. நவீன அங்காடி | 1322291.25 |
| 31. ஓடை விநாயகர் விற்பனை நிலையம் | 211122.70 |
| 32. பாத்திரக் கடை | 77345.00 |
| 33. அத்தாய் | 293487.71 |
| 34. அம்பம் | 198475.95 |
| 35. வடமுறியோர் சங்கம் | 162665.50 |
| 36. கூட்டுறவுநகர் | 367329.75 |
| 37. புடவை நிலையம் | 144602.00 |
| 38. இரும்புக்கிளை | 35673.00 |
| 39. புத்தக நிலையம் | 40680.00 |
| 40. விவசாய சேவை நிலையம் | 9000.00 |

**செல்வி க. நிரஞ்சினி**
*கணக்காளர்*

## செயற்பாடு நவம்பர் - 2008

| | | | |
|---|---|---|---|
| **01. நுகர்ச்சிப் பகுதி** | | | |
| 1.1 விற்பனைகள் | | | 18428026.00 |
| காசு விற்பனை | 15868954.00 | | |
| நிவாரணம் | 1501596.00 | | |
| மாற்றம் வெளி | 1057476.00 | | |
| 1.2 இறுதி இருப்பு | | | 28707063.00 |
| 1.3 மொத்த இலாபம் | | 3.2% | 596823.00 |
| 1.4 நானாவித வருமானம் | | | 20125.00 |
| 1.5 மொத்த வருமானம் | | | 616948.00 |
| 1.6 மொத்தச் செலவு | | | 1304510.00 |
| 1.7 சுத்த நட்டம் | | | 687562.00 |
| **02. பகுதிகளின் செயற்பாடு** | | | |
| 2.1 இலாபத்தில் இயங்கிய பகுதிகள் | | | 258429.00 |
| கிராமிய வங்கி | 210643.00 | | |
| தேநீர்ச்சாலைகள் | 25069.00 | | |
| வாடகை சேவை | 10196.00 | | |
| கணனி, போட்டோப் பிரதி, தட்டச்சு. | 12521.00 | | |
| 2.2 நட்டத்தில் இயங்கிய பகுதிகள் | | | 183982.00 |
| வாகனப்பகுதி | 5196.00 | | |
| எரிபொருள் நிரப்பு நிலையம் | 160220.00 | | |
| பொதிசெய் நிலையம் | 10586.00 | | |
| தொலைத்தொடர்பு | 7980.00 | | |
| 2.3 பகுதிகளின் தேறிய இலாபம் | | | 74447.00 |
| **03. பொது இலாபநட்டக் கணக்கு** | | | |
| பகுதிகளின் தேறிய இலாபம் | | | 74447.00 |
| நிர்வாகப்பகுதி வருமானம் | | | 169125.00 |
| நுகர்ச்சிப் பகுதி நட்டம் | | | 687562.00 |
| நிர்வாகப்பகுதி நட்டம் | | | 443990.00 |
| திரட்டிய செலவு (நட்டம்) | | | 878026.00 |
| சுத்த நட்டம் | | | 1322016.00 |

**திரு. சி. நேசராசா**
*அகக்கணக்காய்வாளர்*

*மாவட்ட செயலகத்திலிருந்து பெற்று விநியோகிக்கும் பொருட்களின்*

## செயற்பாட்டறிக்கை - நவம்பர் - 2008

| | | |
|---|---|---|
| விற்பனை | 2560400.00 | 100% |
| கொள்வனவு | 2491200.00 | 97.3% |
| மேலதிகம் | 69200.00 | 2.7% |
| கொள்வனவுச் செலவு | 32927.00 | 1.3% |
| விநியோகச் செலவு | 1311911.00 | 5.1% |
| சுத்த நட்டம் | 94921.00 | |

**திரு. சா. தணிகாசலபதி**
*வர்த்தக முகாமையாளர்*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஐக்கிய இராச்சியத்தில் இயங்கும் கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர்கள் தினக்குரலுடன் இணைந்து 2008 பூபாள ராகங்கள் உலக சிறுகதைப் போட்டியில் எமது சங்க நூலகர் செல்வி கார்த்திகா பாலசுந்தரம் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.



கடந்த 24.11.2008 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உயர் தொழில் நுட்ப பட்டமளிப்பில் எமது சங்கப் பணியாளர் செல்வி சி. சிவகௌரி (H.N.D.A) பட்டம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டுள்ளார். இவர் கூட்டுறவு உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்தி கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தால் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நாட்டார் கலைகளும் அவற்றின் இன்றைய நிலையும்



கலை உணர்வு என்பது இயல்பாகத் தோன்றுகின்ற ஒன்று. இவை மனித உணர்ச்சிகளின் வடிகால்களாகவும், அழகியல் சார்ந்தனவாகவும் காணப்படுகின்றன. கலைஎன்றால்என்ன? என்பதற்குபல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். "புறப்பொருள் மூலம் ஆன்மீக அறிவைப் புலப்படுத்துவதாக உள்ள கலையையே வாழும் கலை" யாக அடையாளப்படுத்த முடியும். மனித இனம் தோன்றிவிட்ட போதே கலைகளும் தோன்றியமையால் மனிதனுக்கும், கலைகளுக்குமிடையே நெருக்கமானதொரு உறவு நிலை காணப்படுகின்றது. மனித இனம் தோன்றி வளர்ந்த இடங்களிலெல்லாம் அவரவரின் இயல்புக்கும், வாழ்வியல் முறைமைகளுக்கும் ஏற்றவாறு மக்கள் தமது உணர்வுகளை வாய்மொழி மூலமாகவோ, கைவினைகள் மூலமாகவோ வெளிப்படுத்தி வந்தனர். இவ்வாறானவற்றையே பொதுவாக "நாட்டுப்புறக் கலைகள்" (Folk Arts) என வழங்குவர். மரபுவழியாக வழங்கப்பட்டு வரும் இக்கலைகளுக்குள் தனிமனித நிகழ்த்துதல்களும், கூட்டு நிகழ்த்துதல்களும் அடங்குகின்றன. ஆனால் இக்கலைகள் முதன்முதலில் ஒரு தனிமனிதனால் படைக்கப்பட்டாலும் கூட உடனே அவை ஒரு சமுதாயத்திற்குப் பொதுமையாக்கப்படுகின்றன.

தேங்கி நிலைத்து நிற்காத இக்கலைகளுக்கு இலக்கண வரையறைகள் கிடையாது. "மகிழ்ச்சி" ஒன்றே இக்கலைகளின் பிரதான இலக்காகும். மனித மனதில் எழும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் கோலச் சிதறல்களாக இக்கலைகள் விளங்குகின்றன. மனித இனத்தின் ஆரம்பகால கலைவடிவங்களாக ஆடலும், பாடலுமே விளங்கின என ஆராய்ச்சியாளர் கருதுவர். இக்கலைகள் ஒரு நாட்டினுடைய உண்மைத் தன்மையையும் அந்நாட்டில் பண்பாடுகளையும் தெளிவாகக்காட்டும் சிறப்புடையன. தமிழரிடத்தே செல்வாக்குப் பெற்று விளங்கும் ஒரு கலையாக நிகழ்த்துக்கலை அல்லது ஆற்றுகைக்கலை (Performing Arts) விளங்குகின்றது. இக்கலைக்கான சான்றுகளை தொல்காப்பியம் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரை காணமுடிகிறது. தொல்காப்பியம் கூறும் "பண்ணத்தி" என்பது கூத்துப் பாடல் வகையைச் சார்ந்தது. பாடல்கள் யாவும் அக்காலத்தில் நிகழ்த்தப்பட்டவையாகவே (Performance) உள்ளன. அதாவது, பார்வையாளர் முன் நிகழ்த்தி / ஆற்றுப்படுத்திக் காட்டுவதாகும். எனவே இதில் இடம்பெறும் இசை, பாடல் யாவும் உழைக்கும் மக்களுக்கே உரியவை.

நாட்டுப்புறக் கலைகளை உருவாக்குதல், பயன்படுத்தல், நிகழ்த்துதல் முதலான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பலரும் பல்வேறு வகையான வகைப்பாடுகளை முன் வைத்துள்ளனர். கலைக்களஞ்சியம், குடும்ப விழாக்கள், சமூக, ஆலய விழாக்கள், தொழில் நடனங்கள், காடு, மலைகளில் வசிக்கும் பழங்குடி இனத்தாரின் நடனங்கள் என நான்கு வகைப் படுத்தியுள்ளது. எனினும் பின்வரும் வகைப்பாடு யாவர்க்கும் சுலபமானது.

| | |
|---|---|
| ★சாதி அடிப்படையில் | : பறைமேளக்கூத்து, தேவராட்டம் |
| ★ஆடும் முறை | : மயிலாட்டம், ஒயிலாட்டம் |
| ★பயன்படுத்தும் பொருள்கள் | : கோலாட்டம், மரப்பாவைக்கூத்து |
| ★இசைக்கருவி | : வில்லுப்பாட்டு, உடுக்கடிப்பாடல் |
| ★வேடம் | : புலியாட்டம், கரடியாட்டம் |
| ★நிகழ்த்தும் இடம் | : தெருக்கூத்து, வட்டக்களரிக்கூத்து |

மேலும் நிகழ்த்து கலைகள், நிகழ்த்தாக் கலைகள், பொருட்கலைகள் எனவும் பல்வேறு வகைப்படுத்துவர்.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் "கூத்துக்கள்" பிரதான இடம்பிடிப்பனவாகக் காணப்படுகின்றன. வடமோடிக்கூத்து தென்மோடிக்கூத்து, விலாசக்கூத்து, இசைநாடகம், சிந்து நடைக்கூத்து முதலான பல்வேறு வகைகளில் இக்கூத்துக்கள் பயிலப்பட்டு வருகின்றன. இவற்றின் ஆட்ட முறைகளும், தாளக் கட்டுக்களும் வேறுபாடுடையன. நமது நாட்டில் மலையகப் பிரதேசத்தில் பிரபல்யம் வாய்ந்த கூத்து வடிவங்களாக காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர்சங்கர் என்பவற்றைக் குறிப்பிடலாம். இக்கூத்துக்களின் மூலம் புராண கதைகள், சம்பிரதாயங்கள் முதலானவை வெளிப்படுத்தப்படுகின்றன. பாரம்பரியமான நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவங்களுள் சமகாலப் பிரச்சினைகளைப் பாடு பொருள்களாக்கி ஆற்றுகை செய்யும் வழக்கமும் காணப்படுகின்றது. இன்றைய சூழ்நிலையில் போர், நோய், சமாதானம் முதலிய விழிப்புணர்வுகளை மக்களிடையே ஏற்படுத்துவதற்கு தெருக்கூத்து முறை பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிடலாம். காமன் கூத்துப் போன்றவற்றினூடாக அன்பின் தத்துவம் விளக்கப்படுகிறது. தமிழரது பாரம்பரியம், சம்பிரதாயம் முதலியவற்றை இக்கூத்துக்கள் தக்கவைத்துக்கொள்கின்றன. மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்குகின்றன. அதுமட்டுமன்றி இக்கலைகளின் ஊடாக ஆடை, அணிகலன், ஒப்பனை, இசை, நடனம், இசைக் கருவிகள் முதலான பல்வேறு துறைகளும் தனித்தனியாக வளர்வதைக் காணலாம்.

நாட்டார் கலைகளின் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமாகவே காணப்படுகின்றது. எழுத்திலக்கியம் இல்லாத ஒரு சமுதாயம் உலகில் எங்கேனும் இருக்கலாம். ஆனால் வாய்மொழி இலக்கியம் இல்லாத ஒரு சமுதாயத்தைக் காண முடியாது என்பது கற்றோர் ஏற்றுக்கொள்ளும் ஒரு விடயம். எனினும் இவ்வாய்மொழிக் கலையை நாட்டுக்கும், ஏட்டுக்கும் புறமாக எழுத்திலக்கியம் படைத்த தமிழ்ப்பண்டிதர்கள் ஒதுக்கும் போக்குக் காணப்படுகிறது. இக்கூத்துக்களை சமுதாயத்தின் குறிப்பிட்ட சில பிரிவினர் பரம்பரை பரம்பரையாக பயிற்றுவிக்கின்றமையால் அவ்வர்க்கத்தினரை சமுதாயம் ஒதுக்குவதால் அவர்கள் உளரீதியாகப் பாதிப்படைகின்றனர். காலப்போக்கில் தம் நிலையிலிருந்து விலகவும் நேரிடலாம். நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றின் மோகம் காரணமாக இளஞ்சந்ததியினர் இக்கலைகள் மீது நாட்டம் செலுத்துவது குறைந்து வருகின்றது.

(3ம் பக்கம் பார்க்க...

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனும் ஆற்றவே கொள்க – கரும்பூர்ந்த
சாறுபோல் சாலவும் பின்உதவி மற்றதன்
கோதுபோல் போகும் உடம்பு.

– நாலடியார்

சேரல் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org